www.xtrapapers.com

Cambridge Assessment International Education

# Cambridge International A Level

**TAMIL** **9689/42**

Paper 4 Texts **May/June 2022**

**2 hours 30 minutes**

You must answer on the enclosed answer booklet.

You will need: Answer booklet (enclosed)

**INSTRUCTIONS**
- Answer **three** questions in total in **Tamil**, each on a different text:
  - Answer **at least one question** from Section 1.
  - Answer **at least one question** from Section 2.
  - Answer **one other question** from **either** Section 1 **or** Section 2.
- Follow the instructions on the front cover of the answer booklet. If you need additional answer paper, ask the invigilator for a continuation booklet.
- Dictionaries are **not** allowed.
- You may **not** take set texts into the examination.

**INFORMATION**
- The total mark for this paper is 75.
- Each question is worth 25 marks.

**கட்டளைகள்**
- மொத்தம் மூன்று கேள்விகளுக்கு, வெவ்வேறு பாடப் பகுதிகளிலிருந்து, எடுத்து, **தமிழில்** விடை எழுதவும்:
  - முதல் பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - இரண்டாவது பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - முதல் **அல்லது** இரண்டாவது பகுதியிலிருந்து **மற்றொரு கேள்விக்கு** விடை எழுதவும்.
- விடை எழுதுவதற்கான புத்தகத்தின் முதல் பக்கத்திலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும். கூடுதல் விடைத் தாள்கள் தேவைப்பட்டால், தேர்வு அதிகாரியிடம், தொடர்ச்சிக்கான புத்தகத்தைக் கேட்கவும்.
- அகராதிகள் **அனுமதிக்கப்படமாட்டாது**.
- தேர்வு அறைக்குள் எந்தப் பாடப் புத்தகத்தையும் எடுத்துச் **செல்லக்கூடாது**.

**தகவல்**
- இந்தக் கேள்வித்தாளுக்கான மொத்த மதிப்பெண்கள் 75.
- ஒவ்வொரு கேள்விக்கும் 25 மதிப்பெண்கள்.

This document has **12** pages. Any blank pages are indicated.

KI 303052/2
© UCLES 2022

www.xtrapapers.com



**விடைத்தாள் புத்தகத்தைப் பயன்படுத்துவதற்கான கட்டளைகள்**

கருப்பு அல்லது கரு நீலப் பேனாவைப் பயன்படுத்தவும்.

வரைபடங்களுக்கோ, கிராப் வரையவோ நீங்கள் எச்.பி.பென்சிலைப் பயன்படுத்தலாம்.


உங்களுடைய பெயர், சென்டர் எண், உங்கள் எண் ஆகியவற்றை, இந்தப்பக்கத்தின் மேலேயுள்ள, அதற்கான இடத்தில் எழுதவும். தெளிவாக, பெரிய எழுத்துக்களில் எழுதவும்.

எழுத்துக்களை அழிப்பதற்கான பேனாவையோ, திரவத்தையோ **பயன்படுத்தக்கூடாது**.

எந்த பார்க்கோடிலும் **எழுதக்கூடாது**.

கொடுக்கப்பட்ட விடைத்தாள் புத்தகத்தில் எழுதவும். தாளின் இரு பக்கங்களிலும் எழுத வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் விடை எழுதிய பின்னர் இரண்டு வரி இடைவெளி விடவும்.

நீங்கள் விடை எழுதும் கேள்வியின் எண்ணை முதல் மார்ஜினில் எழுதவும்.




நீங்கள் விடை எழுதும் கேள்வியில் துணைக் கேள்விகள் இருந்தால் (எடுத்துக்காட்டு 1.a) துணைக் கேள்வி எண்ணை இரண்டாவது மார்ஜினில் எழுதுங்கள்.

நீங்கள் விடைத்தாள் புத்தகத்தில், விடை எழுதுவதற்கான குறிப்புகளையும் பேனாவால் எழுதிப் பழகலாம் ஆனால் மதிப்பெண். **போடவேண்டாத** அத்தகைய குறிப்புகளை அடித்து விடுங்கள். படிக்கமுடியாமல் அடிக்கத் தேவை இல்லை.

விடைத்தாள் புத்தகத்தின் எந்தப் பகுதியயையும் **கிழித்துவிடாதீர்கள்**.

நீங்கள் எழுதிய எல்லா தாள்களையும் கொடுத்து விடுங்கள் தொடர்ச்சிக்காக விடைத்தாள். புத்தகங்கள் வாங்கியிருந்தால் அவற்றையும் விடைத் தாள் புத்தகத்தில் இணைத்து விடுங்கள்.

www.xtrapapers.com



**BLANK PAGE**

www.xtrapapers.com



**ஏதாவது மூன்று கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். முதல் பகுதியிலிருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியிலிருந்து ஒரு கேள்வியும் பகுதி ஒன்று அல்லது இரண்டிலிருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.**

**பகுதி 1**

**1 பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a) புறநானூறு**

ஆனா ஈகை, அடு போர், அண்ணல்! நின்
யானையும் மலையின் தோன்றும்; பெரும! நின்
தானையும் கடல் என முழங்கும்; கூர் நுனை
வேலும் மின்னின் விளங்கும்; உலகத்து
அரைசு தலை பனிக்கும் ஆற்றலைஆதலின்,
புரை தீர்ந்தன்று; அது புதுவதோ அன்றே;
தண் புனல் பூசல் அல்லது, நொந்து,
'களைக, வாழி, வளவ!' என்று, நின்
முனைதரு பூசல் கனவினும் அறியாது,
புலி புறங்காக்கும் குருளை போல,
மெலிவு இல் செங்கோல் நீ புறங்காப்ப,
பெரு விறல் யாணர்த்து ஆகி, அரிநர்
கீழ் மடைக் கொண்ட வாளையும், உழவர்
படை மிளிர்ந்திட்ட யாமையும், அறைநர்
கரும்பில் கொண்ட தேனும், பெருந் துறை
நீர் தரு மகளிர் குற்ற குவளையும்,
வன் புலக் கேளிர்க்கு வரு விருந்து அயரும்
மென் புல வைப்பின் நல் நாட்டுப் பொருந!
மலையின் இழிந்து, மாக் கடல் நோக்கி,
நில வரை இழிதரும் பல் யாறு போல,
புலவர் எல்லாம் நின் நோக்கினரே;
நீயே, மருந்து இல் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்று வெகுண்டன்ன முன்பொடு,

www.xtrapapers.com



மாற்று இரு வேந்தர் மண் நோக்கினையே.

பாடல் 42 - இடைக்காடனார்.

(i) மேற்கூறிய பாடலில் சோழமன்னனின் குணநலன்கள், நிலபரப்பு ஆகியவற்றை எவ்வாறு கடல், மலை போன்றவற்றோடு மேற்கோள் காட்டி பாடுகிறார் புலவர்?

(ii) பல்வேறு சிறப்புகளை உடைய நாட்டின் மன்னனாகிய நீ, கூற்றுவன் போல இருபெரு வேந்தர்களின் மண்ணைப் பார்த்துக்கொண்டிருக்கிறாய் என்று சோழனுக்கு ஏன் அறிவுறுத்துகிறார் இடைக்காடனார்? [25]

**அல்லது**

**(b) சிலப்பதிகாரம் - இளங்கோ அடிகள்**

சிலம்பை விற்கச் சென்ற கோவலனை அவனுடைய ஊழ்வினை அவனை எவ்வாறு வீழ்த்தியது என்பதை விளக்குக. [25]

www.xtrapapers.com



**2 திருக்குறள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** 781. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

782. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

783. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

784. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.

785. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.

**(i)** மேற்கூறிய குறள்களில் 'பண்புடையாளர் தொடர்பு' 'பேதையார் நட்பு' என்று திருவள்ளுவர் கூறியதன் விளக்கம் என்ன?

**(ii)** நட்பு அதிகாரத்தில் வரும் ஏனைய குறள்களின் விளக்கம் மற்றும் சிறப்பியல்புகள் என்னென்ன என்று தொகுத்து எழுதவும். [25]

**அல்லது**

**(b)** 'அவா அறுத்தல்' மூலமாக இன்பம் எவ்வாறு இடையறாது கிடைக்கும் என்று வள்ளுவர் பெருமான் தரும் விளக்கம் என்ன என்று விவரிக்கவும். [25]

www.xtrapapers.com



**3 தேவாரம் அப்பர்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

முன்னெறி ஆகிய முதல்வன் முக்கணன்
தன்னெறியே சரண் ஆதல் திண்ணமே
அந்நெறியே சென்று அங்கு அடைந்தவர்க்கு எலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே.

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாயப் பத்து
ஏத்த வல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே.

**(a)** பல்வேறு இன்னல்களை சந்தித்த பின்னும் இறுதியாக தன் உடலைக் கல்தூணில் கட்டி கடலில் எறிந்த போதும் அப்பர் பாடிய நமச்சிவாய பதிகத்தின் நயத்தினை விளக்குக. [25]

**அல்லது**

**(b)** மேற்கூறிய பதிகத்தில் இருந்து நமச்சிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தின் பெருமையினை எவ்வாறு அப்பர் பெருமான் போற்றுகிறார் என்று தக்க சான்றுகளோடு விளக்கவும். [25]

www.xtrapapers.com



**பகுதி 2**

**4 இக்காலக் கவிதைகள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a) பாரதியார்**
'கண்ணன் என் சேவகன்' கவிதையில் 'கண்ணனைநான் ஆட்கொண்டேன்!' என்று முடிக்கும் பாரதியாரின் கவிதை நடையை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக. [25]

**அல்லது**

**(b) பாரதிதாசன்**
குளிர்ச்சியான சோலையில் உறங்கும் போதும் காடு மற்றும் கானலின் வெம்மையான இயல்புகளைப் பற்றி பாவேந்தர் கவிதையில் கூறும் விளக்கம் என்னென்ன என்று விளக்குக. [25]

**5 நாவல்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** 'அந்த நாள்' என்னும் நாவலில் ஆசிரியர் மு. வரதராசனார் போர்க்கொடுமைகளைச் சித்தரித்து அதே நேரம் போரற்ற புது உலகம் படைக்கவும் அழைப்பு விடுக்கிறார் என்று சொன்னால் சரியா? [25]

**அல்லது**

**(b)** 'அந்த நாள்' நாவல் ஆசிரியர் மு. வரதராசனாரின் நடையும் கதையின் போக்கும் உங்களைக் கவர்ந்ததா என்று சான்றுகளுடன் விளக்கவும். [25]

**6 நவீன தமிழ்ச் சிறுகதைகள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** தாயின் இறுதிச் சடங்கில் 'ஆறு பனியில் நனைந்து போய் கிடந்தது', என்று தொடங்கி 'நதி எதுவும் நடக்காதது போல ஓடிக்கொண்டிருந்தது' என்று நிறைவு பெறும் 'நதி' சிறுகதையில் ஆசிரியர் ஜெயமோகனின் நடையைப் பற்றி விளக்கவும். [25]

**அல்லது**

**(b)** 'பயணம்' சிறுகதையின் முடிவில் சோற்றை வாயில் அடைத்து மூர்ச்சையான நாகுப் பாட்டி எடுத்த முடிவு மூளை கலக்கத்தினால் ஏற்பட்டதா அல்லது வேறு காரணமா என்று விளக்கவும். [25]

© UCLES 2022 

www.xtrapapers.com



BLANK PAGE

www.xtrapapers.com



BLANK PAGE

© UCLES 2022 

www.xtrapapers.com



**BLANK PAGE**

www.xtrapapers.com



**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.